**CC No.221/21**

**PW - 3 முனியான்டி த/பெ. குருசாமி 05.02.2026**

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு என்றால் எனது அக்கா மகள். பட்டியல் சாட்சி 3 பாப்பா எனது அக்கா, பழனிமுருகன் எனது பங்காளி, பட்டியல் 5 பாக்கியம் எனது மனைவி, பட்டியல் சாட்சி 6 கோவிந்தராஜன் எனது பங்காளி மகன், நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் கூலி வேலை செய்கிறேன். சம்பவத்தன்று நான் வயலுக்கு சென்றுவிட்டு வந்தேன் என்றால் நான் வெளியில் இருந்தேன், 04.30 மணிபோல் வந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லியவிவரங்கள் போலீசார் சொல்லி சொன்ன விவரங்கள் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகள் அனைத்தும் எனது பேத்தி காவ்யா சொல்லிதான் தெரியும் என்றால் ஆம். இந்த வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் கொடுக்க உடன் சென்றேனா என்றால் இல்லை. அசா2 பழனிமுருகனுக்கும், வழக்கின் எதிரிகளுக்கும் அரசியல் ரீதியாக பிரச்சனை ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

2) சம்பவத்தில் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு நான் அழைத்து சென்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.